# இலயோலா கல்லூரி மகளிர் அமைப்பு

## (FORUM FOR LOYOLA WOMEN STUDENTS)

இலயோலா கல்லூரி மகளிர் அமைப்பில் பல்வேறு துறைப் பேராசிரியைகள் மகளிர் புலத் தலைவர்களாகச் சிறப்புடன் பணியாற்றி அழியா முத்திரையைப் பதித்துள்ளனர். அவர்களின் வழியில், மகளிர் புலத் தலைவராக நானும் ஒருங்கிணைப்பாளராக டாக்டர். ஷீலா சசிகுமாரும் மாணவியர் ஒருங்கிணைப் பாளராக ஆரோக்கிய அகினோ ஜெசியும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். 2007–2008–ம் ஆண்டுக்கான மகளிர் அமைப்புத் தொடக்க விழா, 06.08.2007 அன்று, அருள்தந்தையர்கள் அதிபர், முதல்வர், செயலர், இணை முதல்வர் ஆகியோரின் அருளாசியோடும் திரு. ரவி, ஐ.பி.எஸ்., (இணை ஆணையர், சீர்மிகு சென்னை) அவர்களின் சிறப்புரையோடும் தொடங்கப்பட்டது. இத்தொடக்கவிழாவில் மகளிரின் சிறப்பு, அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றி இணை ஆணையர் சிறப்பாக உரையாற்றினார்.

29.11.07 அன்று திரு. பாலு (வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம்) ஊடகமும், மகளிரும் என்ற தலைப்பில் செவிக்கும் சிந்தனைக்கும் விருந்தளிக்கும் வகையில் கருத்துக்களை எடுத்துக்கூறினார்.

08.1.08 அன்று இச்சமூகத்தில் மகளிருக்கு ஏற்படும் வன்முறைகளைத் தடுக்க தற்காப்புக் கலை வல்லுநரான திரு. சஞ்சீவி அவர்கள், செயல்முறையோடு கூடிய உரையாற்றினார்.

இரு கரம் நீட்டி இறைவனைத் தொழுவதும் ஒரு கரம் நீட்டி உதவி செய்வதும் வாழ்க்கையின் குறிக்கோள்கள் என்பதை உணர்ந்த மாணவியர் 19.12.2007 அன்று சென்னை சேத்துப்பட்டில் உள்ள முதியோர் இல்லத்திற்குச் சென்று அவர்களின் அறிவுரைகளைக் கேட்டும் அன்பினைப் பகிர்ந்தும் கொண்டனர்.

விளையாட்டில் நாங்களும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் வகையில் கல்லூரி நடத்திய Throw Ball, Athletics 100, 200mts, Short Put, Long Jump, Carram, Chess போன்ற போட்டிகளில் பங்கு பெற்று மாணவியர் வெற்றி வாகை சூடினர்.

மகளிர் தினத்தை முன்னிட்டு அனைத்து துறைகளுக்கான பேச்சுப்போட்டி உட்பட பல போட்டிகள் வைக்கப்பட்டன. பயிற்றாப் பணியாளர்களில் மகளிருக்கும் பல போட்டிகள் நடத்தப்பட்டன. 08.03.2008 அன்று உலக மகளிர் தின விழா, அருட்திரு. ஜெகத் கஸ்பர் (இயக்குநர் தமிழ் மையம்) அவர்கள் தலைமையில் முனைவர். அரங்க. மல்லிகா (பேராசிரியை, எத்திராஜ் மகளிர் கல்லூரி) அவர்கள் சிறப்புரையாற்றினார். அருட்தந்தை அமல் குழந்தை சாமி, அருள்தந்தை ஆல்பர்ட் முத்துமாலை, மாணவர் புலத்தலைவர் டாக்டர். அந்தோணிசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்வாண்டு அனைத்து துறைகளுக்கான போட்டியில் காட்சித் தகவலியல் துறை முதலிடத்தையும், இரண்டாம் இடத்தை விலங்கியல் துறையும் பெற்றன.

பல்வேறு போட்டிகளில் பங்குப்பெற்ற மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு, மாணவியரின் கலை நிகழ்ச்சியோடு விழா இனிதே நிறைவு பெற்றது.

இவ்வாண்டு, சென்னை மாநகர மகளிர் கலலூரிகளில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்று முதல் பரிசுகளை இக்கல்லூரி மாணவியர் வாங்கிக் குவித்துள்ளனர். மேலும், அரசு, தனியார் தொலைக்காட்சிகளில் அறிவு சார்ந்த சமூகம் சார்ந்த நிகசழ்ச்சிகளைத் தருகின்றனர். தமிழக அரசு நடத்திய விமானப்பணிப்பெண் பயிற்சிக்கு இக்கல்லூரி மாணவியர் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மாணவியர் அமைப்பின் சார்பாக Women's Voice என்ற அரையாண்டு இதழ், Foundation for Academic Excellence & Access (FAEA) அவர்களின் உதவியோடு வெளியிடப்படுகிறது.

இவ்வமைப்பின் எதிர்காலச் செயல்பாடுகள்

1. மாநில அளவிலான கருத்தரங்கு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தல்
2. மாணவியர் பங்கேற்கும் வகையில் சில விளையாட்டுகளுக்குப் பயிற்சி அளித்தல்
3. கிராமங்களுக்குச் சென்று பெண்ணியம் தொடர்பாக ஆய்வு செய்தல்

4. பிற கல்லூரிகள் அல்லது அமைப்புகள் நடத்தும் கருத்தரங்குகளில் மாணவியரைப் பங்கு பெறச் செய்தல்
5. பிற மாநிலங்கள், மாவட்டங்களிலிருந்து சென்னையில் தங்கிப் பயிலும் மாணவியரை ஒரு நாள் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லல்
6. பல்வேறு துறையைச்சார்ந்தவர்களை அழைத்து, அவர்களுடைய வாழ்க்கை அனுபவம், துறை அனுபவம் ஆகியவற்றைக் கூறவைத்து மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
7. சமுதாயத்தில் மகளிரின் கடமை என்ன என்பதை உணரச் செய்தல்
8. மாணவியர் ஓய்வு அறையை விரிவுபடுத்தவும், மாணவியர் விடுதி அமைக்கவும் நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்தல்

ஆணும், பெண்ணும் சமம் என்பதை நன்குணர்ந்து இவ்வமைப்பின் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக உள்ள அருள்தந்தையர்கள், துணைமுதல்வர்கள், மாணவர், அறிவியல், கலைப் புலத்தலைவர்கள், அனைத்துத் துறைப் பேராசிரியர்கள், பயிற்றாப்பணியாளர்கள் அனைவருக்கும் எம் கரம் குவித்த நன்றி. – **பேரா. மேரி சுவர்ணம்பாள்**